கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 158/2022

இன்று 2024 ம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கே.ஆர்.கண்ணன்,B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | கந்தசாமி |
| தந்தை பெயர் | : | பழனியப்பன் |
| வயது | : | 73 |

முதல் விசாரணை

வாதிகள் ஆஜர். 1 முதல் 3 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் 2 ம் வாதி.

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

30.11.2017 – 1ம் வாதி பெயரிலுள்ள தான செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** (அசல் ஆவணம் கையில் வைத்திருப்பதாக சாட்சி கூறுகிறார்)

10.07.2021 – திருப்பூர் வீரபாண்டி கிராமம் க.ச.736/6 க்குரிய நத்தம் நிலவரி துாய சிட்டா உண்மை நகல் **வா.சா.ஆ.2** ஆகும்.

வீட்டு வரி ரசீதுகள் 2 எண்ணிக்கை அசல் **வா.சா.ஆ.3** ஆகும்.

தண்ணீர் வரி ரசீதுகள் 2 எண்ணிக்கை அசல் **வா.சா.ஆ.4** ஆகும்.

மின் கட்டண ரசீதுகள் 2 எண்ணிக்கை அசல் **வா.சா.ஆ.5** ஆகும்.

27.08.1993 – 2ம் வாதி பெயரிலுள்ள தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆகும் (அசல் ஆவணம் கையிருப்பில் இருப்பதாக சாட்சி சகூறுகிறார்)

07.04.2021 – திருப்பூர் தெற்கு வீரபாண்டி கிராமம் க.ச.எண்736/10க்குரிய நத்தம் நிலவரி துாய சிட்டா உண்மை நகல் **வா.சா.ஆ.7** ஆகும்.

11.02.2022 – 2ம் வாதி பெயரிலுள்ள வீட்டு வரி ரசீது அசல் **வா.சா.ஆ.8** ஆகும்.

11.02.2022 – 2ம் வாதி பெயரிலுள்ள தண்ணீர் வரி ரசீது அசல் **வா.சா.ஆ.9** ஆகும்.

2ம் வாதி பெயரிலுள்ள மின் கட்டண ரசீது அசல் **வா.சா.ஆ.1**0 ஆகும்.

29.01.2022 – வாதி 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.11** ஆகும்.

28.2.2022 – 2ம் வாதி வட்டாட்சியரிடம் சர்வே எண் 736/6 சொத்தை அளவீடு செய்யவேண்டி கொடுத்த மனுவின் ஒளி நகல் **வா.சா.ஆ.12** ஆகும்.

18.4.2022 – திருப்பூர் தெற்கு சார் ஆய்வாளர் 2ம் வாதிக்கு கொடுத்த அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.13** ஆகும்.

21.3.2022 – வாதிகள் மற்றும் 3 நபர்கள் திருப்பூர் தெற்கு வட்டாட்சியரிடம் கொடுத்த மனு ஒளி நகல் **வா.சா.ஆ.14** ஆகும்.

25.3.2022 – பல்லடம் வட்டம் புல எண் 736க்குரிய புலப்படம் உண்மை நகல் **வா.சா.ஆ.15** ஆகும்.

25.3.2022 – திருப்பூர் வீரபாண்டி கிராமம் கச எண் 736/8 முதல் 10க்குரிய நத்தம் நிலவரி அடங்கல் பதிவேடு உண்மை நகல் **வா.சா.ஆ.16** ஆகும்.

25.3.2022 – மாதிரி வரைபடம் **வா.சா.ஆ.17** ஆகும்.

1 மற்றும் 2ம் வாதியின் ஆதார் மற்றும் குடும்ப அட்டை ஒளி நகல் **வா.சா.ஆ.18** ஆகும் ( அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது)

தாவாப்படி உத்தரவாக கேட்டுக் கொள்கிறேன்.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2024.03.12 15:28:58 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.